

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.8.2023) இராமநாதபுரத்திலிருந்து இராமேஸ்வரம் செல்லும் வழியில், இராமேஸ்வரம் வட்டம், பாம்பன் ஊராட்சி, அக்கா மடம் மீனவர் குடியிருப்புக்கு நேரில் சென்று, அங்குள்ள மீனவர் குடும்பத்தினருடன் கலந்துரையாடினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா.விஷ்ணு சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.8.2023) இராமநாதபுரத்திலிருந்து இராமேஸ்வரம் செல்லும் வழியில், இராமேஸ்வரம் வட்டம், பாம்பன் ஊராட்சி, அக்கா மடம் மீனவர் குடியிருப்பு பகுதிக்கு நேரில் சென்று, அங்குள்ள மீனவப் பெருமக்கள், சிறுவர், சிறுமியருடன் கலந்துரையாடினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. விஷ்ணு சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### இராமேஸ்வரம் அருகே அக்கா மடத்தில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் மீனவர்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார்!

## கோரிக்கை மனுக்களைப் பெற்று நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்!

இராமேஸ்வரம், ஆக.19-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.8.2023) இராமநாதபுரத்திலிருந்து இராமேஸ்வரம் செல்லும் வழியில், இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் வட்டம், பாம்பன் ஊராட்சி, அக்காமடம் மீனவர் குடியிருப்பு பகுதிக்கு நேரில் சென்று, அங்குள்ள மீனவர் குடும்பத்தினருடன் கலந்துரையாடினார்.

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் நேற்று (18.8.2023) நடைபெற்ற தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மற்றும் மீனவ சங்கங்கள் இணைந்து நடத்தும் மீனவர் நல மாநாடு மற்றும் மீனவர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்வதற்காக இராமநாதபுரத்திலிருந்து இராமேஸ்வரம் செல்லும் வழியில், அக்கா மடம் மீனவர் குடியிருப்பு பகுதிக்கு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று மீனவப் பெருமக்களிடம் அவர்களது தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

அப்போது, அப்பகுதி மக்கள் குடியிருப்பு பட்டா வேண்டுமென்று கோரிக்கை வைத்தனர். பட்டா வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார். மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பித்து இருக்கிறீர்களா என்று அங்குள்ள பெண்களிடம் கேட்டறிந்தார். அத்துடன் பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்களையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

முதலமைச்சர் அவர்கள், அக்கா மடம் மீனவர் குடியிருப்பு பகுதியில் உள்ள மாணவச் செல்வங்களுடன் கலந்துரையாடி, அவர்களது படிப்பு விவரங்கள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த நிகழ்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராம லிங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. விஷ்ணு சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.8.2023) இராமநாதபுரத்திலிருந்து இராமேஸ்வரம் செல்லும் வழியில், இராமேஸ்வரம் வட்டம், பாம்பன் ஊராட்சி, அக்கா மடம் மீனவர் குடியிருப்பு பகுதிக்கு நேரில் சென்று, அங்குள்ள மீனவப் பெருமக்கள், சிறுவர், சிறுமியருடன் கலந்துரையாடினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. விஷ்ணு சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### பல்வேறு சமூக நலப்பணிகளை ஆற்றிவரும் – மதுரை

# தத்தநேரி ராஜேந்திரனுக்கு முதல்வர் வாழ்த்து!

## முத்தமிழறிஞர் கலைஞர் சிலையை வழங்கி பாராட்டினார்!

மதுரை, ஆக. 19-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.8.2023) மதுரையில், பல்வேறு சமூக நலப் பணிகளை ஆற்றி வரும் மதுரை தத்தநேரியைச் சேர்ந்த சுயதொழில் புரிந்து வரும் ராஜேந்திரன் அவர்களை நேரில் அழைத்து பாராட்டினார். அப்போது, அவருக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டதோடு, சால்வை அணிவித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையையும் வழங்கி சிறப்பித் தார்.

மதுரை தத்தநேரியைச் சேர்ந்த ராஜேந்திரன் அவர்கள் திருப்பதி விலாஸ் என்ற பெயரில் மிளகாய், வத்தல், வடகம் வியாபாரம் செய்து வருகிறார். சமூகப் நலப் பணிகளில் ஆர்வம் கொண்ட அவர், மதுரை மாநகராட்சி, திரு.வி.க. மேல்நிலைப் பள்ளிக்கு 10 வகுப்பறைகள், இறைவணக்க கூட்ட அரங்கம், இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் ஆகியவற்றை 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்து தந்துள்ளார். மேலும், இந்த ஆண்டு மதுரை மாநகராட்சி, கைலாசபுரம் ஆரம்பப் பள்ளியில் 4 வகுப்பறைகள், ஒரு ஆழ்துளை கிணறு, உணவு அருந்தும் இடம், கழிப்பறைகள் ஆகியவற்றை 71 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் அமைத்து தந்துள்ளார். மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் அருகில் உள்ள புது மண்டபத்தை பழமை மாறாமல் புதுப்பிக்கும் பணிக்கு 2 கோடி ரூபாய் வழங்குவதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

சமூக அக்கறையோடு தொண்டாற்றி வரும் ராஜேந்திரன் அவர்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாராட்டி, அவரது சமூக நலப் பணிகள் தொடர்ந்திட வாழ்த்தினார்.



முத்தமிழறிஞர் கலைஞரின் மனச்சாட்சியாக விளங்கியவரும் – 'திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூளையாகச் செயல்பட்டவரும் – ஒன்றிய அமைச்சராக இருந்து அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்று மிகச் சிறப்பாகப் பணியாற்றியவருமாகிய முரசொலி மாறன் அவர்களின் 90வது பிறந்த நாளினை முன்னிட்டு நேற்று முன்தினம் (17.8.2023 வியாழக்கிழமை) காலை சென்னை – கோடம்பாக்கம், 'முரசொலி' அலுவலகத்தில் அமைந்துள்ள முரசொலி மாறன் திருவுருவச் சிலைக்குக் கீழே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு கழகப் பொதுச்செயலாளர் – நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். மு.க.தமிழரசு, ஒன்றிய முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன் எம்.பி., அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், கா.இராமச்சந்திரன், மாநிலங்களவை உறுப்பினர் இரா.கிரிராஜன், கழக செய்தி தொடர்புச் செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மாவட்டச் செயலாளர்கள் நே.சிற்றரசு எம்.சி., மயிலை த.வேலு எம்.எல்.ஏ., முரசொலி பொது மேலாளர் எஸ்.இராஜசேகரன் மற்றும் கழக முன்னணியினர், நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

### முரசொலி மாறன் புகழ் போற்றுவோம்!

# முரசொலி மாறன் கருத்துகளை இளைய சமுதாயத்துக்குப் பயிற்றுவிப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - வலைதளப்பதிவு!



மதுரை, ஆக. 19-

ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் பிறந்தநாளான நேற்று முன்தினம் மதுரையில் இருந்து விடுத்த வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,"முரசொலி மாறன் அவர்களது புகழ் போற்றுவோம்! முரசொலி மாறன் அவர்களின் கருத்துகளை இளைய சமுதாயத்துக்குப் பயிற்றுவிப்போம்!" என்று உருக்கமுடன் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் 90வது பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**நாளெல்லாம் நம்மை இயக்கிடும் நூற்றாண்டு நாயகர் தலைவர் கலைஞரின் மனச்சாட்சியென வாழ்ந்திட்ட முரசொலி மாறன் அவர்களது 90ஆவது பிறந்தநாள் இன்று!**

**மதுரை சிலைமானில் தலைவர் கலைஞர் அவர்களால் 1952இல் திறந்து வைக்கப் பட்ட கழக அலுவலகத்தில், மரியாதைக்குரிய முரசொலி மாறன் அவர்களது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினேன்.**

**கொள்கைக் கருவூலமான முரசொலி மாறன் அவர்கள் எழுதிய மாநில சுயாட்சி நூல் அனைவரும் படித்திட வேண்டிய ஒன்று!**

**முரசொலி மாறன் அவர்களது புகழ் போற்றுவோம்! அவரது கருத்துகளை இளைய சமுதாயத்துக்குப் பயிற்றுவிப்போம்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.